**செ. கு. எண்:154** **நாள்: 12.10.2017**

## <u>செய்தி வெளியீடு</u>

<u>முன்னாள் அமைச்சரும் முன்னாள் கழக மகளிர் அணி செயலாளருமான திருமதி கோகுல இந்திரா அவர்களின் அண்ணன் திரு. எஸ். தேவபாண்டியன் (எ) ராஜன் அவர்கள் காலமானதையடுத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள், திருமதி கோகுல இந்திரா அவர்களுக்கு அனுப்பிய இரங்கல் செய்தியின் விவரம் பின்வருமாறு</u> :-

“தங்களின் அன்புச் சகோதரர் திரு.எஸ். தேவபாண்டியன் (எ) ராஜன் அவர்கள் சாலை விபத்தில் காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த துயரம் அடைந்தேன்.

இந்தத் துயரச் சம்பவத்தினால் ஈடுசெய்ய முடியாத இழப்பு தங்களுக்கு ஏற்பட்டுள்ள போதிலும், இந்தத் துயரத்தை தாங்கிக் கொள்ளக் கூடிய சக்தியையும், தைரியத்தையும் தங்களுக்கும், தங்கள் குடும்பத்தாருக்கும் அளிக்க வேண்டும் என்றும், திரு. தேவபாண்டியன் (எ) ராஜன் அவர்களின் ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாறவும் எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

திரு. தேவபாண்டியன் (எ) ராஜன் அவர்களை இழந்து வாடும் தங்களுக்கும், தங்கள் குடும்பத்தார் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.”

* * * * *

**வெளியீடு : இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை, சென்னை 9.**